10th March 1961]

*737 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, திருத்துறைப்பூண்டி தாலுகா ஓடியம்பவம் கிராமத்தில் விவசாய இலாகா மூலம் ஏற்படுத்தும் பம்ப் இர்ரிகேஷன் திட்டம் எந்த நிலையிலிருக்கிறது?

(இ) எப்போது துவங்கி, எத்தனை ஏக்கர்களுக்குப் பாசன வசதியளிக்கும்?

(உ) விவசாய இலாகா மூலம் ஏற்படுத்த இருக்கும் மற்ற பம்ப் இர்ரிகேஷன் திட்டங்கள் என்னென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The scheme is functioning from 23rd December 1960. Hundred acres are likely to be benefited by the scheme.

(c) There are no other river pumping schemes that are proposed to be implemented in the district at present.

SRI A. VEDARATHNAM: இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கிற பம்பிங் ஸ்கீமில் உள்ள பம்ப் போதவில்லை என்றும் இன்னும் ஒரு அடிஷனல் பம்ப் வேண்டுமென்று அந்தக் கிராமத்தார் கோரியிருக்கிறார்களா? அதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: டிஸம்பர் 23-லிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறதென்று சொன்னேன். அப்பொழுது தண்ணீர் அவசியமாக வேண்டியிருந்தது. தண்ணீர் கொடுக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது அது போதவில்லையென்ற தகவல் என்னிடம் இல்லை. இது நடைபெறும்போது ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு வேறு என்ன விஸ்தரிப்பு செய்யவேண்டுமோ அவை கவனிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM: இந்த காவேரி தண்ணீர் கடைமடையில்தான் வீணாகப்போவது அதிகமாகயிருக்கிறது. இதை மராமத்து இலாகா எடுத்துக் கொண்டிருக்கிறது. பம்பிங் ஸ்கீமினால் மட்டும் போதிய அளவில் அதை பூர்த்தி செய்யமுடியவில்லை. எனவே விவசாய இலாகாவும் சில இடங்களை எடுத்துக் கொண்டு அதன் மூலம் வீணாகும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த விவசாய இலாகா முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சில திட்டங்களை இதுவரை விவசாய இலாகா எடுத்துக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. மற்றவையெல்லாம் மராமத்து இலாகா மேற்பார்வையில் இருக்கிறது. அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே இதற்கு மேலும் புதிய திட்டங்களை விவசாய இலாகா எடுத்துக்கொள்வதற்கு இப்பொழுது உத்தேசமில்லை.

[10th March 1961

SRI K. R. NALLASIVAM: காவேரி கடைக்கோடியில் தண்ணீர் வீணாகப் போவதாக கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். காவேரிக்கு மேல் பகுதிகள், சேலம் ஜில்லா போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பம்ப்செட்கள் மூலம் அதிகப்படி தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய வசதி செய்து கொடுப்பது பற்றி சர்க்கார் யோசனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI V. SUBBIAH: ரிவர் பம்பிங் ஸிஸ்டம் எந்தெந்த ஜில்லாக்களில் எவ்வளவு பம்ப்கள் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது? எந்தளவு அவை வெற்றிகரமான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ராமநாதபுரம் ஜில்லாவில் இளையான்குடி, பெட்டுச்செட்டிப்பட்டி, சொர்ணம் பட்டி கோவிந்தநல்லூர், கிராமங்களில் இப்பொழுது எடுத்துக் கொள்வதாக உத்தேசம். திருநெல்வேலி ஜில்லாவில், மேல் ஆத்தூர், கல்லிக்குளம் இவைகளில் எடுத்துக் கொள்வதாக உத்தேசம். இவை விவசாய இலாகாவால் நிறைவேற்றப்படும்.

MR. SPEAKER: அடுத்த இரண்டு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

Beedi Factories Act

* 738 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பீடித் தொழிற்சாலை சட்டத்தின் 2 (g) [i] பிரிவு செல்லத் தக்கதல்ல என்று சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பளித்துள்ளதால் பீடித் தொழிலின் ட்ரேட் மார்க் முதலாளிகள் சட்டத்திலிருந்து தப்பிக்க வழி ஏற்பட்டுள்ளதால் அச்சட்டத்தின் 2 (g) பிரிவுக்கு திருத்தம் கொண்டுவர உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: The matter is under consideration.

* 739 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லா பீடித் தொழிலாளர் சங்கத்திலிருந்து மாதிரி திருத்தங்களைப் பற்றி 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி, 1960-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதிகளில் சர்க்காருக்கு விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(இ) அவைகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?